## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் ("கூட்டுத்தாபனம்") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 7 இன் 31 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியில் நிதிக் கருவிகளிலிருந்து ஏற்படக்கூடிய ஆபத்தின் தன்மை மற்றும் அளவு தொடர்பான தகவல்கள் | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களிற்கு வசதியளிப்பதற்காக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 இன் 110 ஆம் பந்தியின் பிரகாரம் வாடிக்கையாளர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளிலிருந்து உருவாகிய வருமானத்தை இனம்காண்பதற்கான கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் தொடர்புபட்ட தரப்பினர் மற்றும் மருந்து விநியோகஸ்தர்கள் ஆகவுள்ள கூட்டுத்தாபனத்தின் கூட்டுமுயற்சிகளுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளிலிருந்து உருவாகிய வருமானத்தை இனம்காண்பதற்கான கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வருமானத்தை இனங்காணும் கொள்கையை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கீட்டு நியமமொன்றால் வேண்டப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் தவிர ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக் கூடாது. எனினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார கடன்கொடுத்தோர் கணக்கில் (பொது) காணப்பட்ட ரூபா 57,212 தொகையான வரவு மீதி அத் திகதியிலுள்ளவாறான ரூபா 587,189,088 தொகையான செலவு மீதிக்கெதிராக ஈடுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஒன்றுக்கொன்று ஈடுசெய்யாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 117 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை விளங்கிக்கொள்வதற்குரிய முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிதிப் பொறுப்புக்கள் தொடர்பான கொள்கை போன்ற முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் 30 மற்றும் 31 ஆம் பந்திகளின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திறனாக காணப்படாத புதிய இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தை (எஸ்எல்எவ்ஆர்எஸ்) நிறுவனம் பிரயோகித்திருக்காத போது நிறுவனம் இவ் விடயத்தையும் ஆரம்ப பிரயோக காலப்பகுதியின் போது நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான புதிய எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் பிரயோகம் கொண்டிருக்கும் சாத்தியமான தாக்கத்தை மதிப்பீடு செய்வது தொடர்பாக தெரிந்த அல்லது நியாயமாக மதிப்பிடக்கூடிய தகவல்களையும் நிறுவனம் வெளிப்படுத்த வேண்டும். எனினும் வழங்கப்பட்டிருந்த போதிலும் தற்போதும் செயற்திறனாக இல்லாத புதிய அல்லது திருத்திய நியமங்களிற்கான (உதாரணமாக: எஸ்எல்ஆர்எவ்எஸ் 16 குத்தகை வாடகை) கணக்கீட்டுக் கொள்கைகள் கூட்டுத்தாபனத்தால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் இற்றைப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ரூபா 222,514,842 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் அவை தற்போதும் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் அது தொடர்பாக மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுமானத்தேய்விற்கான கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் முன்கொண்டுசெல்லும் | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியை அகற்றுவதற்கான கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 68 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர் பணிக்கொடை பொறுப்பின் தற்போதைய பெறுமதியை தீர்மானிப்பதற்கு உத்தேச அலகுக் கடன் முறை பிரயோகிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனம் அம் முறை பயன்படுத்தப்பட்டிருந்ததா என்பதை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பௌதீக மெய்மையாய்வில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 1,983,315 தொகையான துணைக் கருவிகளின் இருப்பு பற்றாக்குறை மற்றும் ரூபா 213,107 தொகையான துணைக் கருவிகளின் மேலதிக இருப்பு என்பன கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | பொறி மற்றும் இயந்திரத்தின் துணைக்கருவிகளின் கணக்கெடுப்பில் ஏற்பட்ட தவறுகள் மற்றும் குறைபாடுகள் காரணமாக இருப்புக் கணக்கெடுப்பு மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் சரியான இருப்பு pronto கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் இருப்பு கணக்கெடுப்பு ஏடுகள் தாமதமொன்றின் காரணமாக திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | அத் தவறை சீர்செய்த பின்னர் எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதியிடும் மூலப்பொருள் இருப்பு ரூபா 359,411 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பொதியிடும் பொருள் இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 929,759 சேதமடைந்த மற்றும் பயன்படுத்தப்பட முடியாத இருப்பின் பெறுமதி இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. பதிலாக, அப் பெறுமதி மிகை இருப்பொன்றாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. மேலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 358,289 பொதியிடும் பொருள் இருப்பு மீதியானது இருப்பு பற்றாக்குறையொன்றாக இலாபத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. | நீண்ட காலமாக பிழையான குறியீட்டின் கீழ் இருப்பு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தற்போது இது சரியான குறியீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில் பொதியிடும் பொருள் இருப்பு இரண்டு குறியீடுகளின் கீழும் பதிவு செய்யப்பட்டிருந்ததால் இருப்பு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. இது அடுத்த ஆண்டில் சீர்செய்யப்படும். | அத் தவறை சீர்செய்த பின்னர் எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மூலப்பொருள் விற்பனை வருமானம் செயற்பாட்டு வருமானமாக காட்டப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,881,782 தொகையான மூலப்பொருட்களின் விற்பனைக் கிரயம் வியாபாரக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | இது அடுத்த ஆண்டில் சரியாக சமர்ப்பிக்கப்படுவதுடன் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு இலாபம் சரியாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (உ) | JICA மானியத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் நில அளவீட்டிற்காக ஏற்பட்ட ரூபா 1,775,625 தொகை நடைமுறையல்லாச் சொத்தொன்றாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் இது இலாபத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டில் சீர்செய்யப்படும். | -மேற்படி- |

### 1.5.3 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து ரூபா 1,435,228,910 பெறவேண்டிய தொகையில் ரூபா 4,830,000 தொகை 2 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருந்தது. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து பெறவேண்டிய நிலுவைத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு 2019 சனவரியிலிருந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. குறித்த சில சந்தர்ப்பங்களின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளை பெற முடியாதிருந்ததுடன் இது தொடர்பில் சுகாதார அமைச்சினூடாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பழைய கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,460,251 கிரயமான மூலப்பொருள் இருப்பின் 6 உருப்படிகள் காலாவதியாகியிருந்தன. நட்டத்திற்கு பொறுப்பாக இருந்த தரப்பினர்களை இனங்காண்பதற்கு முறையான புலனாய்வொன்றை மேற்கொள்வதற்கும் அத்தகைய இருப்பை முறையாக அகற்றுவதற்கும் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூலப்பொருட்களின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் இவ் இருப்பின் ஆயுட்காலம் நீடிக்கப்பட முடியாதிருந்ததென தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்திருந்தது. ஆகையால் காலாவதியான இருப்புக்களை பதிவழிப்பதற்கான முறைமையொன்றின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நட்டத்திற்கு பொறுப்பாக இருந்த தரப்பினர்களை இனங்காண்பதற்கும் உரியவாறு நட்டத்தை அறவீடு செய்வதற்கும் இருப்புக்களை முறையாக அகற்றுவதற்கும் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது உற்பத்திசெய்யப்பட்ட மருந்துகளின் தரம் மற்றும் பௌதீக தன்மையான குறைபாடுகளின் விளைவாக உற்பத்தி தடுக்கப்பட்டதன் காரணமாக மருந்துகளை மீள உற்பத்தி செய்வதற்காக மேலதிகக் கிரயம் ரூபா 17,567,693 ஏற்பட்டது. ஒவ்வொரு ஆண்டிலும் உற்பத்திச் செயன்முறையில் ஏற்பட்ட சாத்தியமற்ற நிலைமைகளை இழிவுபடுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உலக சுகாதார நிறுவனத்தின் சிறந்த உற்பத்தி நடைமுறைகளிற்கு இணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றி மருந்துகளை மீள உற்பத்தி செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. மருந்து உற்பத்திகளில் ஏற்படுகின்ற பல்வேறு தொழில்நுட்ப பிரச்சனைகளின் தன்மையின் பிரகாரம் மீள உற்பத்தி செய்யப்படக்கூடியதும் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட வேண்டியதுமான மருந்துகள் இனங்காணப்படுகின்றன. மாற்றமடையாத விபரணம் மற்றும் முறையொன்றின் கீழ் ஒரே வழங்குநர்களிடமிருந்து மூலப்பொருட்களை கொள்வனவு செய்து உற்பத்தி செய்யும் அடிப்படையில் இத் தவறுகளை இழிவுபடுத்த முடியும். | மருந்துகளின் தரம் குறைவடைதல் மற்றும் உற்பத்தி சிக்கல்கள் என்பவற்றை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 முறையான அங்கீகாரமின்றி புத்தகங்களிலிருந்து பதிவழித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2011 ஒக்தோபர் 01 தொடக்கம் 2019 ஆகஸ்ட் 07 வரையான காலப்பகுதிக்கு மேலாக பயன்படுத்தப்பட்டிருக்காத condenser unit இன் ரூபா 150,397 தொகையான மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 2,957,791 ஆக பிழையாக கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அப் பெறுமதி முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் இதனை முறையாக அகற்றுவதற்கு நடடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டில் JICA மானியத்தின் கீழ் பெறப்பட்டிருந்த condenser unit பெயரிலான உதிரிப் பாகங்களுடனான Auto Still இயந்திரம் 2007 ஆம் ஆண்டு வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்பாட்டுத் தவறுகள் காரணமாக இதனை திருத்தம் செய்வதற்கு முயற்சிக்கப்பட்டிருந்தது. இயந்திரம் 1987 ஆம் ஆண்டிற்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததன் காரணமாக உற்பத்திக் கம்பனி 2013 ஆம் ஆண்டு வரையான உதிரிப் பாகங்களின் உற்பத்தியை நிறுத்தியிருந்தது. இயந்திரத்தின் குறித்த சில உதிரிப் பாகங்கள் ஏனைய இயந்திரங்களை புதுப்பிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டின் இலாபத்திற்கு எதிராக condenser unit ஐ பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு முன்னர் முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் முறையாக அகற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 2004 சனவரி 08 ஆம் திகதிய பி௱டி 21 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் இலங்கை சனனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 103, 104, 105 மற்றும் 1646 | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 4 மோட்டார் வாகனங்களில் 3 மோட்டார் வாகனங்கள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒன்று வெளித் | இவ் வாகனங்கள் விசேட செயற்திட்டங்களிற்காக வெளித் தரப்பினர்களிற்கு கையளிக்கப்பட வேண்டியிருந்தன, நாளாந்த ஓட்ட அட்டவணைகள் பேணப்பட்டிருக்கவில்லை, திருத்தம் செய்யும் கிரயம் | வாகனங்கள் வழங்கப்பட்டிருந்த விசேட செயற்திட்டங்கள், வெளித் தரப்பினர்கள் யார் மற்றும் வெளித் தரப்பினர்களிற்கு வாகனங்களை வழங்குவதற்கான அதிகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தரப்பினரிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட 02 மோட்டார் வாகனங்களிற்கும் வெளித் தரப்பினரிற்கு கையளிக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனத்திற்கும் உரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனமொன்று 2019 யூலை 26 இல் கூட்டுத்தாபனத்திற்கு திருப்பியனுப்பப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வாகனத்திற்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உயர்வாக காணப்பட்டதன் காரணமாக மைக்கிறோ வாகனத்தை அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது, காப்புறுதிக் கம்பனியிடமிருந்து சேதத்தை மீள்நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை, அவ்வாறு செய்திருந்தால் உரிமைக் கோரிக்கை இல்லாதமைக்கான வெகுமதியை (no claim bonus) இழப்பதன் மூலம் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படக்கூடும். | என்ன மற்றும் ஓட்ட அட்டவணைகள் போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 நவம்பர் 13 இன் 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட முடியாதிருந்த ரூபா 23,286,681 கிரயமான மூலப்பொருள் இருப்பு, ரூபா 501,986 கிரயமான முடிவுப்பொருள் இருப்பு, ரூபா 2,765,657 கிரயமான பொதிசெய்யும் பொருள் இருப்பு மற்றும் ரூபா 53,595,221 மொத்தக் கிரயமானதும் புத்தகப் பெறுமதி பூச்சியமாக உள்ளதுமான நிலையான சொத்துக்கள் என்பவற்றை முறையாக அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் அதிகளவு உருப்படிகள் 2018 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டிருந்தன. அத்துடன் முறையாக அகற்றுவதற்கு சாத்தியமானளவு விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் முறையாக சொத்துக்களை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | உத்தியோகத்தர் ஒருவரிற்கு செலுத்தப்படக்கூடிய இடர்கடன் தொகை ரூபா 250,000 இற்கு வரையறுக்கப்பட வேண்டிய போதிலும் அவ் எல்லையை விஞ்சி 2018 ஆம் ஆண்டின் போது 41 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 4,149,980 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது. ஏனெனில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகள் மாத்திரமே கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபடுகின்றன. | கூட்டுத்தாபனத்திற்கு இசைவான நிர்வாகம் மற்றும் ஆளுகை பிரமாணங்கள் உள்ளடங்கிய தாபன விதிக் கோவை தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும் வரை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் பிரயோகிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சுகாதார அமைச்சின் செயலாளரிற்கு முகவரியிடப்பட்ட 2009 மார்ச் 09 ஆம் திகதிய டிஎம்எஸ்/ஈ4/10/4/090/2 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதத்தின் 02-01 ஆம் பந்தி | (i) நிறைவேற்று தர மற்றும் நிறைவேற்றுத் தரமற்ற உத்தியோகத்தர்களிற்கு 2009 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் பிரயாணம் செய்த தூரத்தை கருத்தில் கொள்ளாமல் முறையே ரூபா 4,700 மற்றும் ரூபா 3,000 மாதாந்த போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிலிருந்து இப் படி முறையே ரூபா 7,000 மற்றும் ரூபா 5,000 வரை அதிகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. | மு.ப 6.00 மணி தொடக்கம் பி.ப 10 மணி வரை சேவை மாறுதல் செயற்பாட்டில் உள்ளது. போக்குவரத்து வசதிகள் வழங்கப்படாத இடத்தில் கூட்டுத்தாபனம் அமைந்துள்ளது, ஊழியர்கள் வசிக்கின்ற இடம் அமைந்துள்ள தூரத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் போக்குவரத்துப் படி செலுத்தப்படுகின்றது. | பணிப்பாளர் சபைத் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். ஏற்கனவே செலுத்தப்பட்ட கொடுப்பனவிற்கு மேவுகை அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| | | (ii) மாதாந்த உற்பத்தி ஊக்குவிப்பு படியாக பதவியணி உறுப்பினர்களிற்கு ரூபா 4,000 தொகை செலுத்தப்படக்கூடியதாக இருந்த போதிலும் அத் தேவைப்பாட்டிற்கு முரணாக ரூபா 12,000 | உற்பத்தி ஊக்குவிப்பு படி விதிமுறைகள் (norms) மாற்றப்பட வேண்டுமென முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | ஆகக்கூடிய மாதாந்த கொடுப்பனவிற்குட்பட்டு 2011 யூலை 01 இலிருந்து முழுப் பதவியணியினரிற்கும் உற்பத்தி ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 18,024,917 மேலதிகக் கொடுப்பனவு உள்ளடங்கலாக 2011 யூலை தொடக்கம் 2018 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு ரூபா 80,744,739 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க குழுவால் விதிமுறைகள் ஆய்வு செய்யப்பட்டிருந்தன, ஊக்குவிப்பு படிகளிற்கான முன்மொழிவொன்று உரிய நேரத்தில் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக முன்மொழிவை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளதுடன் அதற்கிணங்க கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 251,262,057 இலாபமொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 223,907,939 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 27,354,118 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. விற்பனைகளிலிருந்தான வருமானம் 46 சதவீதத்தால் அதிகரித்தமையே இம் முன்னேற்றத்திற்கான காரணமாக உள்ளது.

### 2.2 பிரதான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான நிர்வாகச் செலவினம் முறையே ரூபா 204,579,086 மற்றும் ரூபா 242,218,982 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அச் செலவினம் மீளாய்வாண்டின் போது 18 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. சுகாதார காப்புறுதி திட்டத்திற்கான ஏற்பாட்டு செலவினங்கள் 1314 சதவீதத்தால் அதிகரித்தமை இச் செலவின முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மொத்தலாப விகிதம் மற்றும் தேறியலாப விகிதம் என்பன முறையே 2.4 சதவீதம் மற்றும் 2.3 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் கடன்பட்டோர் புரள்வு விகிதம் 8.3 தடவைகளால் குறைவடைந்திருந்தது. அத்துடன் கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் 48 நாட்களால் அதிகரித்திருந்தது. இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தை விரிவுபடுத்துவதற்கான ஒப்பந்தத்திற்கான மதியுரைக் கட்டணங்களாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 283,923 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பின்னர் கேள்வி கோருதல் நிறுத்தப்பட்டிருந்ததால் அது தொடர்பாக ஏற்பட்ட கிரயம் பயனற்ற செலவினமாகியிருந்தது. | ஆளுகை அதிகாரியின் தீர்மானத்தின் பிரகாரம் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தை விரிவுபடுத்துவதற்கான ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்தது. | முறையான திட்டமிடலின் பிரகாரம் ஒப்பந்தம் தொடர்பான நிர்வாகம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| Cimetidine Tablets BP 200 mg மருந்தை உற்பத்தி செய்வதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் 2018 மே 18 இல் காலாவதியாகியிருந்த போதிலும் 6 ஆண்டுகளிற்கு மேலாக புதிய அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அம் மருந்துகளின் 39 மில்லியன் குழுசைகள் 2012 மே 18 தொடக்கம் 2019 மார்ச் 07 வரையான காலப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்தன. | அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்காக 2019 மார்ச் 13 இல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் உற்பத்தி மேற்கொள்ளப்பட முடியும். | 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 3 மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக ரூபா 9,784,235 கிரயத்தில் மீளாய்வாண்டின் போது 4,477 கிலோகிராம் மூலப்பொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 07 மாதங்கள் தொடக்கம் 24 மாதங்கள் வரையான காலமாக அவை பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றன. | மிகுதி மூலப்பொருட்களை உற்பத்திக்காக பயன்படுத்த முடியும். | சந்தை திட்டம் மற்றும் உற்பத்தி திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மூலப்பொருட்களை கொள்வனவு செய்யும் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அத் திட்டத்தின் பிரகாரம் மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதன் மூலம் காலாவதியாகுதல் இழிவுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது உற்பத்தி செய்யப்பட்டிருந்த 4 மருந்து உருப்படிகளில் 627 கிராம் தரமற்றிருந்தது. ஆகையால் அவை உற்பத்தியிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக ஏற்பட்ட நட்டம் ரூபா 1,341,104 ஆக காணப்பட்டது. | உற்பத்தி செயன்முறையிலுள்ள தரம் குறைந்த மருந்துகளை இனங்காணுதல் ஊழியர்களின் அவதானிப்பினை மாத்திரமே அடிப்படையாக கொண்டிருந்ததுடன் அதற்காக வேறு நெறிமுறை எதுவும் காணப்படவில்லை. நிராகரிக்கப்பட்ட தொகை மிகவும் குறைவாக உள்ளது. எனினும் அந் நிகழ்வின் பின்னர் மீண்டும் இது ஏற்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | முறையான தரக் கட்டுப்பாட்டு நடைமுறையொன்று அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) மூலப்பொருள் காணப்படாமை, இயந்திர இயலளவு போதாமை மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்படாத மருந்துகள் காரணமாக மீளாய்வாண்டிற்காக மருத்துவ வழங்கல் பிரிவால் கட்டளையிடப்பட்ட மருந்துகளின் தொகையில் ரூபா 113,987,125 விற்பனை விலையிலான 8 வகையான மருந்துகளின் 53.2 அலகுகளை கூட்டுத்தாபனம் விநியோகித்திருக்கவில்லை. | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் மருந்துகளை பதிவு செய்வதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக 7 வகையான மருந்துகளின் விநியோகம் தாமதமடைந்திருந்தது, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையை ஸ்தாபிப்பதில் ஏற்பட்ட முரண்பாடுகள் இந் நிலைமைக்கு தாக்கமளித்திருந்தது, தீர்வு நடவடிக்கையொன்றாக | மருத்துவ வழங்கல் பிரிவின் கட்டளைகளை பூர்த்தி செய்வதற்கும் சந்தைப் பங்கை பாதுகாப்பதற்கும் ஆகக் கூடிய முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தனியொரு நிறைவேற்று உத்தியோகத்தரிற்கு இச் செயற்பாடுகளின் பணிப்பொறுப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அந் நேரத்தில் 100 சதவீதம் அச் சிக்கல் தீர்க்கப்பட்டிருந்தது. Erythromycin tablets BP 250mg மருந்து உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் இது மேலும் பயன்படுத்தபப்படுவதில்லை. | |

**3.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உலக சுகாதார நிறுவனத்தின் 143 நிறைவேற்றுக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கான சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரின் நியமனத்தை கொண்டாடுவதற்காக நடாத்தப்பட்ட விழா ஒன்றிற்காக மீளாய்வாண்டின் போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு ரூபா 1,000,000 தொகை அனுப்பப்பட்டிருந்தது. | சுகாதார அமைச்சின் வேண்டுகோள் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | நிதிகள் கூட்டுத்தாபன நோக்கங்களிலிருந்து விலகி வழமைக்கு மாறான நோக்கங்களான பாராட்டு விழாக்களிற்கு செலவிடப்படக் கூடாது. |

**3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) Penicillin Zonal களஞ்சியங்களை Cephalosporin உற்பத்தி பிரிவிற்கு மாற்றுவதற்கான ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 2017 பெப்ரவரி 01 இல் ஒப்பந்ததாரரிற்கு ரூபா 14,216,622 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வேலைத் தளத்தை கையளிப்பதற்கு 7 மாத காலத்திற்கு மேல் எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் 2017 யூன் 06 இல் உள்ளவாறு 4 மாதங்களிற்கு மேற்பட்ட காலமாக முற்பணம் ஒப்பந்ததாரரிடம் காணப்பட்டிருந்தது. கூட்டுத்தானத்திற்கு | கட்டிடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் இன்னொரு இடத்திற்கு கொண்டுவரப்பட வேண்டியிருந்ததன் காரணமாக வேலைத்தளத்தை கையளித்தல் தாமதமாகியிருந்தது. முற்பணம் செலுத்தப்படாவிட்டால் | முறையான திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த நிர்வாகம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்படுத்தப்பட வேண்டியிருந்த சந்தர்ப்ப கிரயம் ஏறத்தாழ ரூபா 500,000 ஆகும். | ஒப்பந்தத்தை நிறுத்தும் ஆபத்து காணப்படும். இது நிகழ்ந்தால் மீண்டும் கூறுவிலைகள் கோரும் போது விலைகள் அதிகரிப்பதை தவிர்க்க முடியாதிருக்கும். | |
| (ii) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் 2017 மார்ச் 02 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 ஆகஸ்ட் 06 வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் 884 நாட்கள் காலப்பகுதி தாமதமாகியிருந்தது. | அத்தகைய மருந்து உற்பத்தி செய்யும் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான மதியுரை நிறுவனங்கள் இலங்கையில் காணப்படாததுடன் முன்னாள் செயற்திட்ட முகாமையாளரின் கீழ் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தரமான மருந்துகளை உற்பத்தி செய்வதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதறகாக முன்னுரிமை வழங்கப்பட்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நிர்மாணத்தை துரிதப்படுத்துவதை விட உரிய நியமங்களின் பிரகாரம் மருந்துகளை உற்பத்தி செய்யும் தேவைப்பாடு காணப்படுகின்றது. | -மேற்படி- |
| (iii) | நிர்மாணக் காலப்பகுதியை நீடித்தல் முறையாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அல்லது தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது என உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு எழுத்து மூலமான சான்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்காக உடன்படிக்கையில் நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. | தாமதக் கட்டணங்களிற்கான நிபந்தனைகள் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (iv) | ஒப்பநதக் காலப்பகுதியை நீடித்ததன் காரணமாக ஒப்பந்த விலை 6.8 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,710,815 தொகையால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் மதியுரைக் கட்டணங்கள் ரூபா 977,542 ஆல் அதிகரிக்கப்பட்டிருந்தன. | களஞ்சியங்கள் குளிரூட்டப்பட வேண்டியிருந்தமை மற்றும் பெறுகை நடைமுறைகளிற்காக 7 மாதங்கள் செலவிட்டமை போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்தன. | முறையான திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த நிர்வாகம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | Cephalexin Monohydrate BP 2015 இன் உற்பத்திக்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடமிருந்து பதிவுச் சான்றிதழைப் பெறுவதற்கு முன்னர் உற்பத்திப் பொறிக்காக பெறப்பட வேண்டிய பொருள் உற்பத்தி நடைமுறைக்கான சான்றிதழானது நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக பெறப்பட முடியாதிருந்தது. | உற்பத்திப் பொறியின் நிர்மாணத்தை பூர்த்தி செய்த பின்னர் அத்தகைய மருந்துகளை உற்பத்தி செய்வதற்கும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அங்கீகாரம் பெறப்படுவதற்கும் தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (vi) | ரூபா 4,222,836 கிரயத்தில் 2018 ஆகஸ்ட் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட Cephalosporin Monohydrate BP 2015 இன் 500 கிலோகிராம் மூலப்பொருள் இருப்பு பயன்படுத்தப்பட முடியாதிருந்தது. | Cephalosporin Zone பெயரால் புதிய மருந்து வலயமொன்றை நிறுவுவதற்கு தீர்மானமொன்று 2016 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டிருந்தது, ஒரேநேரத்தில் புதிய மருந்துகளிற்கான செயல்முறைகுறிப்பு அபிவிருத்தி பிரிவால் பரீட்சிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் சந்தைக்கு புதிய மருந்துகளை அறிமுகப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்ப்பட்டிருந்தது. எனினும் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய முடியாமை மற்றும் 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு இந்த மூலப்பொருள் இருப்பு கொள்வனவு செய்யப்பட்ட்டிருந்தமை காரணமாக இலக்கை அடைய முடியாதிருந்தது. | மூலப்பொருள் யதார்த்தமான திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வெளிப்படைத்தன்மையின்றியும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்களை பின்பற்றாமலும் நிர்மாணத்தின் மதியுரையாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட்டமை, ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படும் திகதிகள், தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கான நிபந்தனைகள் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்படாமை, முறையான அங்கீகாரமின்றி ஆரம்பத் திட்டங்களை தொடர்ச்சியாக மாற்றுதல், அளவீட்டு விலைப் பட்டியல் மற்றும் | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | முறையான திட்டமொன்றின் பிரகாரம் ஒப்பந்த நிர்வாகம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

திட்டங்களுடன் இணங்காமல் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுதல், ஒப்பந்தக் கோவைகள் முறையாக பேணப்படாமை மற்றும் முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்படாமை பேன்ற காரணங்களினால் கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்த நிர்வாகம் நலிவான நிலையில் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டிற்கான பிரதான பெறுகைத் திட்டத்திற்கிணங்க பெறுகைக் கால அட்டவணை முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளின்றி பெறுகைக்கால அட்டவணையை தயாரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் பிரதான பெறுகைத் திட்டத்திற்காக பெறுகைக் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்துடன் கூட்டுமுயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஆற்றல்வளம் மிக்க முதலீட்டாளர்களை வரவழைப்பதற்கான முன்மொழிவுகளை கோருதல், கூட்டுமுயற்சிகளை ஸ்தாபித்தல், கூட்டுமுயற்சிகளை நடாத்துதல் மற்றும் அத்தகைய முயற்சிகளிலிருந்து மருந்துகளை விநியோகித்தல் போன்றன தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) கூட்டுத்தாபனத்துடன் கூட்டுமுயற்சியை ஆரம்பிப்பதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்காக முதலீட்டாளர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட அழைப்பு 2015 ஒக்தோபர் 16 இல் புதினப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுமுயற்சியை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் அப்போது வரை பெறப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டில் அரசாங்கம் மற்றும் தனியார் துறையின் பங்குடமைக்காக மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளை குறிப்பிட்டு அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந் நடவடிக்கை வெளிப்படைத் | முன் அங்கீகாரங்கள் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தன்மையாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஆகையால் விருப்பத்தை தெரிவிப்பதற்கான அழைப்பு 2015 ஒக்தோபரில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. | |
| (ii) | கூட்டுத்தாபனத்துடன் கூட்டுமுயற்சியை ஆரம்பிப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் முறையே செயற்திட்டக் குழு மற்றும் அமைச்சரவை அங்கீகரித்த பேரம்பேசுதல் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான ஆவணங்கள் கேள்விகளை திறந்த பின்னர் கேள்விதாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. முன்மொழிவுகளை பெற்ற பின்னர் அவை அனைத்தும் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. முன்மொழிவுகளை ஆய்வு செய்து அமைச்சரவை பரிந்துரைக்காக சமர்ப்பிப்பதற்கு பேரம்பேசுதல் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. அக் குழுவிற்கு உதவுவதற்கு அரச நிதித் திணைக்களத்தால் செயற்திட்டக் குழு நியமனம் செய்யப்பட்டிருந்தது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.1(ஈ) வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.3(அ) வழிகாட்டலின் பிரகாரம் கூட்டுமுயற்சிகளை ஆரம்பிப்பதற்காக பெறப்பட்ட முன்மொழிவுகளை திறப்பதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அவ் வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் முன்மொழிவுகளை திறப்பது தொடர்பான அறிக்கையொன்று உரிய மாதிரியில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக கேள்விகளை திறக்கும் திகதி, நேரம் மற்றும் | கூட்டுமுயற்சிகளை ஆரம்பிப்பதற்காக பெறப்படுகின்ற முன்மொழிவுகள் வெறுமனே ஆர்வத்தை வெளிப்படுத்துதலாக மாத்திரமே காணப்பட்டதன் காரணமாக முன்மொழிவுகளை திறப்பதற்காக குழுவொன்றை நியமிக்கும் தேவைப்பாடு காணப்படாததுடன் அவை நிதி அல்லது தொழில்நுட்ப | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்பட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பித்திருந்த முதலீட்டாளர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | பெறுமதியாக காணப்படவில்லை. | |
| (iv) | கூட்டுமுயற்சிகளை ஆரம்பிப்பதற்காக 17 முதலீட்டாளர்களுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அவர்களில் 10 முதலீட்டாளர்கள் ஆர்வத்தை வெளிப்படுத்துதலை சமர்ப்பித்திருக்கவில்லை. | உத்தியோகபூர்வ குழுக்களின் பரிந்துரையின் பிரகாரம் முன்மொழிவுகளை தாமதமாக சமர்ப்பித்திருந்த கேள்விதாரர்களிற்கு கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | -மேற்படி- |
| (v) | அமைச்சரவை நியமித்த உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரையின் பிரகாரம் கூட்டுமுயற்சிக்காக இணங்கியிருந்த முதலீட்டாளரின் உற்பத்திச் செயன்முறையின் தரக் கட்டுப்பாடு, முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப உதவி என்பன கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட வேண்டியதுடன் அந் நோக்கத்திற்காக அவ் முதலீட்டாளரின் வணிகத்தினது பங்குகளில் 10 சதவீதம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட வேண்டும். எனினும் கூட்டுத்தாபனத்திற்கு பங்கை வழங்கியிருக்காத 2 தனியார் கம்பனிகளிடமிருந்து ரூபா 1,063,106,416 இற்கு 12 மருந்து உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. மேலும் அத்தகைய 2 கம்பனிகளின் உற்பத்தி தொடர்பான தரக் கட்டுப்பாடு, முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவி என்பன எந்த வழியிலும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2019 யூன் 14 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பங்குகளை கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் பங்குகளை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கைகள் எதிர்காலத்தில் கைச்சாத்திடப்படும். | அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | கூட்டுமுயற்சிக்காக இணங்கியிருந்த முதலீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு மருந்துகளிற்குமான கிரயத் தாள்கள் சுயாதீனமான தரப்பினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் பிரதம கணக்காளர் உள்ளடங்கிய விலைக் குழுவால் கிரயத் தாள்கள் பரீட்சிக்கப்படுகின்றன. | கூட்டுமுயற்சியின் கிரயத் தாள்கள் சுயாதீனமான தரப்பினால் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (vii) | கூட்டுத்தாபனம் மற்றும் கூட்டுமுயற்சியால் தனித்தனியாக இலாப எல்லை பெறப்பட்டிருந்தது. இதன் விளைவாக கூட்டுமுயற்சி கட்டியெழுப்பப்பட்டிருக்காததுடன் குறைந்த கிரயத்தில் மருந்துகளை விநியோகிக்கும் நோக்கம் எதிர்பார்க்கப்பட்டவாறு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் உரிய உற்பத்தியை மேற்கொண்டிருந்த கூட்டுமுயற்சி 20 சதவீத இலாப எல்லையொன்றிற்கு உரித்துடையதுடன் அவ் விலையில் 6 சதவீத சேவைக் கட்டணம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்துடையது. | அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (viii) | உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரையின் பிரகாரம் கூட்டுமுயற்சிக்கு இணங்கியிருந்த முதலீட்டாளரின் உற்பத்தியின் pharmaceutical and surgical consumables இன் உற்பத்திக் கிரயத்திற்கு 20 சதவீத இலாப எல்லையை சேர்ப்பதன் மூலம் விற்பனை விலை தீர்மானிக்கப்பட வேண்டும். எனினும் அப் பரிந்துரைக்கு முரணாக pharmaceutical and surgical consumables இன் கிரயத்திற்கு 20 சதவீதத்தை விடக் கூடுதலான இலாபம் மற்றும் சேவைக் கட்டணங்களை சேர்ப்பதன் மூலம் விற்பனை விலையை தீர்மானித்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அத்தகைய சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன. | | |
| | ❖ மீளாய்வாண்டின் போது முதலீட்டாளர்களால் உற்பத்திசெய்யப்பட்ட 8 மருந்து உருப்படிகளின் மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 297,522,198 ஆக இருந்தது. இது கிரயத்திற்கு இலாபமாக ரூபா 44,574,789 | அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அவ் விலையில் 20 சதவீத இலாப எல்லை கூட்டுமுயற்சிக்கு உரித்துடையதாக உள்ளதுடன் 6 சதவீத | உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை சேர்க்கப்பட்டு ரூபா 342,096,987 பட்டியல் பெறுமதியில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பட்டியல் பெறுமதிக்கு ரூபா 20,543,677 சேவைக் கட்டணங்களை சேர்த்து ரூபா 362,640,664 விலையில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கூட்டுத்தாபனம் விற்பனை செய்திருந்தது. முதலீட்டாளரால் 8 மருந்துகளின் மொத்தக் கிரயத்தில் 14.98 சதவீத இலாப எல்லையும் கூட்டுத்தாபனத்தால் பட்டியல் பெறுமதியில் 6 சதவீத சேவைக் கட்டணமும் உழைக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க கிரயத்திற்கு இலாபம் மற்றும் சேவைக் கட்டணங்களாக 21.89 சதவீதம் சேர்க்கப்பட்டு விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. | சேவைக் கட்டணம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்துடையதாக உள்ளது. | |
| ❖ | உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரையின் பிரகாரம் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்கின்ற கம்பனிகளுடன் மாத்திரம் கூட்டுமுயற்சிகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். எனினும் உற்பத்தி செய்யாமல் surgical consumables இன் விநியோகத்தை மாத்திரம் மேற்கொள்ளுகின்ற தனியார் கம்பனியொன்றுடன் கூட்டுமுயற்சியொன்றை ஸ்தாபிப்பதற்கு உடன்படிக்கையொனறு கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 82(1) ஆம் பிரிவின் பிரகாரம் இத் தனியார் கம்பனி மருத்துவக் கருவிகளை உற்பத்தி செய்வதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் | கூட்டுமுயற்சி உடன்படிக்கையின் 3.15.2 ஆம் பந்தியின் பிரகாரம் உற்பத்திப்பொருள் உற்பத்தியாளரால் வழங்கப்பட முடிந்திராத சம்பவத்தின் போது ஏனைய உள்ளூர் உற்பத்தியாளர் அல்லது வழங்குநரிடமிருந்து அவ் உற்பத்திப்பொருளை பெற்றுக்கொள்வதற்கு அவர் அனுமதிக்கப்படுகின்றார். அதற்கிணங்க surgical consumables இன் உற்பத்தியாளரான கம்பனி, உரிமம் பெற்ற விநியோகஸ்தர் மற்றும் கூட்டுத்தாபனம் 2019 மே 30 இல் முத்தரப்பு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டிருக்காத மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காத வழங்குநர்களுடன் கூட்டுமுயற்சிக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபையின் பதிவை பெற்றிருக்கவில்லை. பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி உள்ளடங்கலாக Crape Bandage 7.5cm x 4.5m இன் 473,800 அலகுகளின் மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 42,349,476 ஆக காணப்பட்டது. இது ரூபா 6,444,624 இலாப எல்லை சேர்க்கப்பட்டு ரூபா 48,794,100 பட்டியல் பெறுமதியில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனம் பட்டியல் பெறுமதிக்கு ரூபா 5,076,960 சேவைக் கட்டணத்தை சேர்த்து ரூபா 53,871,060 விலையில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்திருந்தது. இவ் உருப்படிகளின் மொத்தக் கிரயத்தில் முதலீட்டாளரால் 15.22 சதவீத இலாப எல்லையும் கூட்டுத்தானத்தால் பட்டியல் பெறுமதியில் 10.4 சதவீத சேவைக் கட்டணமும் உழைக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க கிரயத்திற்கு இலாபம் மற்றும் சேவைக் கட்டணங்களாக 27.2 சதவீதத்தை சேர்த்து விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபையின் பதிவு அனுமதிப்பத்திரங்கள் மருத்துவக் கருவிகளை கட்டளையிடுவதற்காக உரிமம் பெற்ற வழங்குநரால் பெறப்பட்டிருந்தது. | |
| (ix) | மீளாய்வாண்டின் போது கூட்டுமுயற்சிகளிலிருந்து விநியோகிக்கப்பட்ட மருந்துகளில் ஒரு மருந்து உருப்படியில் மாத்திரம் தரம் பரீட்சிக்கப்பட்டிருந்தது. | கூட்டுமுயற்சிகளுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒரு சில மாதிரிகள் (random samples) பரீட்சிக்கப்பட்டிருந்த போதிலும் இது 100 சதவீதம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டுத்தாபனத்தின் ஆய்வுகூட வசதிகள் தொழில்நுட்ப ரீதியிலும் மனித வளங்களிலும் நன்றாக அபிவிருத்தி | விநியோகிக்கப்பட்ட மருந்துகள் மற்றும் மருத்துவக் கருவிகளின் உயர் உறுத்திப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு சாத்தியமாக கூட்டுத்தாபனத்தால் முறைமை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படுகின்றன. அந் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் தற்போது காணப்படுவதை விட ஆகக்கூடியளவு அனைத்துப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட முடியும். | |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4(i) ஆம் வழிகாட்டலிற்கு முரணாக Pasidol மேம்படுத்தல் நடவடிக்கைகளிற்காக 300 தொலைக்காட்சிகளை நிறுவுவதற்காக ரூபா 13,860,000 தொகை செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. ரூபா 11,380,446 தொகையான 70 சதவீத முற்பணம் இரண்டு சந்தர்ப்பங்களில் அந் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. முற்பண பிணை அல்லது செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. | செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வியாபார விளம்பரங்களை கையளிப்பதும் அவற்றின் கீழ் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் நிகழ்ச்சித்திட்டங்களை விளம்பரப்படுத்துதல் கட்டாயமானதென அமைச்சரவை குறிப்பிட்டிருந்தது. ஆகையால் அந் நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 70 சதவீத முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. செலசினே தொலைக்காட்சி நிறுவனம் ஒரு அரசாங்க நிறுவனமாக உள்ளதன் காரணமாக ஒப்பந்தத்தை பூர்த்திசெய்யாது விடுவதற்கான ஆபத்து மிகவும் குறைவு என்பதால் செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் உத்தரவாதச் சான்றிதழ்கள் பெறப்பட வேண்டும். |

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 16,007,188 ஒப்பந்த பெறுமதியுடைய உருக்கினாலான கட்டமைப்பு ரீதியான களஞ்சியம் (steel structural warehouse) மற்றும் ரூபா 15,018,184 ஒப்பந்த பெறுமதியுடைய மேம்பாலம் (flyover) என்பவற்றின் நிர்மாணத்திற்கான இரண்டு ஒப்பந்தங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | |
| | (i) | கேள்வி திறத்தல் குழு நியமனம் செய்யப்பட்டிருக்காததுடன் கேள்வி திறத்தல் தொடர்பான செயன்முறை உரிய மாதிரியில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது பொதுவான கேள்வி திறத்தல் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. கேள்வி திறத்தலிற்கான செயன்முறை பதிவேட்டுப் புத்தகத்தில் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் ஏனைய மாதிரி எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) | ஒப்பந்ததாரரை தெரிவு செய்வதற்காக முறையே 19 வாரங்கள் மற்றும் 26 வாரங்கள் எடுத்திருந்ததுடன் மேலதிகமாக செலவிடப்பட்ட காலம் 15 வாரங்கள் மற்றும் 22 வாரங்கள் ஆகும். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை சமர்ப்பித்த பின்னர் பெறுகைக் குழு அங்கீகாரத்தை வழங்குவதற்கு அதிக காலம் எடுத்திருந்தமை தாமதத்திற்கான காரணமாக உள்ளது. | -மேற்படி- |
| | (iii) | கட்டமைப்பு ரீதியான களஞ்சிய நிர்மாணத்திற்காக தெரிவுசெய்யப்பட்டிருந்த ஒப்பந்ததாரரிடமிருந்து செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. | கட்டமைப்பு ரீதியான களஞ்சியத்திற்கான செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| | (iv) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உருக்கினாலான கட்டமைப்பு ரீதியான களஞ்சியத்தின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் பீலிகளிலிருந்து (gutters) மழை நீர் உட்புகுவதால் கட்டிடத்தின் மேல் தளம் பயன்படுத்த முடியாதிருந்தமை 2019 யூலை | குறைபாடுகள் திருத்தம் செய்யப்பட்டு 2019 ஆகஸ்ட் அளவில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும். | முறையான மேற்பார்வையொன்றின் கீழ் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 25 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ரீதியான மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| | (v) | உருக்கினாலான கட்டமைப்பு ரீதியான களஞ்சியத்தின் நிர்மாணத்திற்காக ஒப்பந்ததாரரால் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து மூலப்பொருட்களிற்குமான கொடுப்பனவுகள் ஒப்பந்ததாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. அதில் மூலப்பொருளிருப்பு பெறுமதி கணிப்பீடு செய்யப்படாமல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அவ் இருப்பு கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட மூலப்பொருள் மீதி மேம்பாலத்திற்காக பயன்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | மூலப்பொருள் இருப்பு மீதி கணக்குகளிற்கு எடுக்கப்பட வேண்டியதுடன் தேவையான இடத்திற்கு வழங்கப்பட வேண்டும். |
| | (vi) | நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த 2018 யூலை 05 ஆம் திகதிக்கு பதிலாக 07 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2019 பெப்ரவரி 05 இல் மேம்பாலத்தின் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | கூட்டுத்தாபன வளவில் ஒரே ஒப்பந்ததாரரால் வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல் களஞ்சிய கட்டிடம் மற்றும் மேம்பாலம் நிர்மாணிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. நாளாந்த நடவடிக்கைகளிற்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை கருத்தில் கொண்டு வெற்று பிளாஸ்ரிக் போத்தல் களஞ்சிய நிர்மாணம் பூர்த்தி செய்யப்படும் வரை மேம்பாலத்தின் நிர்மாணம் தாமதமடைந்திருந்தது. | முறையான திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | | ரூபா 82,994,567 மொத்த ஒப்பந்த பெறுமதியையுடைய நான்கு மாடிக் கட்டிடத்தின் நிர்மாணம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) | கதவுச் சட்டகங்கள், கதவுகள் மற்றும் யன்னல்கள் மற்றும் steel hand rail ஆகிய மூன்று விடயங்கள் திட்டங்கள் மற்றும் அளவீட்டுப் பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட தொகையை விடக் குறைவானதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி விடயத்தை | கூட்டுத்தாபனத்தில் பொருத்தப்பட்ட கதவுகளிற்கு சமமான கதவுகள் காணப்படாததன் காரணமாக சந்தையில் கிடைக்கக்கூடிய கதவுகள் பெருத்தப்பட வேண்டியிருந்தன. மதிப்பிடப்பட்ட அலுமினிய | மதிப்பிடப்பட்ட திட்டங்கள் மற்றும் அளவீட்டுப் பட்டியல்களின் அளவீடுகளை விடக் குறைந்த நிர்மாணங்களிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய விகிதாசார |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கருத்தில் கொள்ளாமல் மொத்த ஒப்பந்தப் பெறுமதி செலுத்தப்பட்டிருந்தது. | விடயங்களின் அளவுப் பிரிவுகள் சந்தையில் காணப்படாததன் காரணமாக சந்தையில் கிடைக்கக்கூடிய பதிலீடுகள் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தன. அளவை கணிப்பீட்டில் எடுக்கப்பட்ட அளவீடுகளை பரீட்சித்த பின்னர் குறைபாடுகளை அறவீடு செய்த பின்னர் இறுதி விலைப் பட்டியலை செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கழிப்பனவுகளின் பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| | (ii) | 2016 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 118,589,409 மொத்த தொகை செலுத்தப்பட்டு நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 2018 ஒக்தோபர் 12 இல் உள்ளவாறு திறக்கப்பட்ட கட்டிடம் வளிப்பதனாக்கிகள் பொருத்தப்படாமை மற்றும் நிர்மாணத்தில் குறைபாடுகள் காணப்பட்டமை காரணமாக 2019 ஆகஸ்ட் 20 வரையிலும் எந்தவொரு பயனுள்ள நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது. | கட்டிடத்தின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் வளிப்பதனாக்கிகளை பொருத்துதல் மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்வதிலுள்ள தாமதங்கள் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது. | முறையான திட்டத்தின் பிரகாரம் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆய்வுகூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலை என்பவற்றை ஸ்தாபிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 88,000,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்கான ஒப்பந்தம் 2018 மே 08 இல் ரூபா 33,468,608 தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 ஆகஸ்ட் 02 இல் ரூபா 22,856,750 தொகை ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | |
| | (i) | நான்காவது மாடியின் கதவுகளின் வகை மற்றும் யன்னல்களின் வகை தொடர்பான விபரமான வரைபடங்கள் கணக்காய்விற்குச் சமாப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கதவுகள் மற்றும் யன்னல்களிற்கான வேலை விபரங்கள் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் சந்தையில் கிடைக்கக்கூடியதாக | நிர்மாணங்களிற்கான ஒப்பந்தங்கள் தொடர்பான அனைத்து விபரமான திட்டங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ள அளவுகளின் பிரகாரம் பதிலீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அவை அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | வேண்டும். |
| (ii) | கூரை, பீலிகள் மற்றும் வடிகாண் குழாய்களின் நிர்மாணத்தின் வேலை விபரிப்பின் பிரகாரம் நிறுவப்பட்டிருக்கவில்லை. எனினும் அவ் விடயத்தின் ரூபா 531,037 தொகையான மொத்த ஒப்பந்த பெறுமதி செலுத்தப்பட்டிருந்தது. | பெரியளவிலான பலகை பயன்படுத்தப்பட்டமைக்காக மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அப் பலகைக்குரிய விலைகளை சமர்ப்பித்த போது அவ் விடயத்திற்காக மொத்த தொகையும் செலுத்தப்பட முடிந்திருந்தது. | பீலிகள் மற்றும் வடிகாண் குழாய்களை பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் அல்லது ஒப்பந்ததாரரிடமிருந்து அல்லது கொடுப்பனவை அங்கீகரித்த தரப்பினர்களிடமிருந்து மீளளிப்பு பெறப்பட வேண்டும். |
| (iii) | கட்டிடம் அமைந்திருந்த காணியின் பகுதியொன்றை மேவுகை செய்வதற்காக அமைக்கப்பட்டிருந்த இரும்பு வலை வேலியின் நீளம் 132 அடியாக இருந்த போதிலும் அமைக்கப்பட்டிருந்த வேலியின் நீளம் 394.5 அடியாக இருந்தது என குறிப்பிட்டு ரூபா 219,455 தொகை தவறுதலாக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | அவ் விடயத்திற்குரிய அளவீடுகளை பதிவு செய்யும் போது பிழைகள் இடம்பெற்றிருந்தன. அடுத்த விலைப்பட்டியலில் அத் தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் | ஒப்பந்ததாரரிடமிருந்து அல்லது கொடுப்பனவை அங்கீகரித்த தரப்பினர்களிடமிருந்து மேலதிகக் கொடுப்பனவுகளை மீளப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | அளவீட்டுப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட விபரங்களுடன் இணங்காமல் இரும்பு வலை வேலி அமைக்கப்பட்டிருந்த போதிலும் அதனை கருத்தில் கொள்ளாமல் ரூபா 329,810 தொகையான விடயத்தின் மொத்தப் பெறுமதி செலுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | கட்டிடத்திற்கான குடிநீரை வழங்குகின்ற கிணற்றின் இயலளவு போதுமானதாக இருக்காததுடன் அக் கிணறு மலசலகூடம் மற்றும் கழிவுநீர் முறைமைக்கு அருகில் அமைந்துள்ளது. நீரின் தரம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | முதலாவது கட்டத்தில் பயிற்சி பாடசாலைக்கு 30 மாணவர்களை கொண்ட குழுவொன்றை சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. தேவையான நீரை வழங்குவதற்கு சிறியளவிலான reverse osmosis முறைமையை | தூய குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவுவதற்கு எதிர்பாக்கப்படுகின்றது. | |
| (vi) | கட்டிடம் குளிரூட்டப்பட்டிருக்காததுடன் நிர்மாணம் மற்றும் நவீனமயப்படுத்தியதற்காக உரிய உள்ளூராட்சி நிறுவனத்திடமிருந்து தராதரச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. | கிரயம் மிக உயர்வாக காணப்பட்டதன் காரணமாக இவ் விடயம் அகற்றப்பட்டிருந்ததுடன் கட்டிடத்திற்கான தராதரச் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த திட்டத்திற்குரிய நிபந்தனைகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (vii) | கட்டிடத்தில் காணப்படுகின்ற செயற்படாத மின்தூக்கி பயனபடுத்த முடியாததாக மூடப்பட்டுள்ளதுடன் 4 மாடிக் கட்டிடத்திற்காக மின்தூக்கியின் தேவைப்பாடு காணப்பட்டது. | வேலைத்தள கூட்டங்களின் போது (site meetings) அவ் மின்தூக்கியை அணுகுவதை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | கட்டிடத்திற்காக மின்தூக்கியொன்று வழங்கப்பட வேண்டும். |
| (viii) | கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்காக உள்ளக தரவுக் கேபிள் மற்றும் தொலைபேசி வரிசைகளை அமைத்தல் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் குழாய்கள் மாத்திரம் பொருத்தப்பட்டிருந்தன. | வேலைத்தளக் கூட்டங்களில் உள்ளக தரவுக் கேபிள் அமைக்கப்படக் கூடாது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. | தேவைப்பாட்டின் பிரகாரம் உள்ளக தரவுக் கேபிள்கள் மற்றும் தொலைபேசி வரிசைகளை அமைத்தல் வேண்டும். |
| (ix) | ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் ஆய்வுகூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலையை ஸ்தாபிப்பதற்கான ஏனைய தேவைப்பபடுகளை நிறைவேற்றுவதற்கு முன்திட்டம் அல்லது முன் ஒழுங்குகள் கூட்டுத்தாபனத்தில் காணப்படக்கூடியதாக இருக்கவில்லை. | பயிற்சி பாடசாலையை ஆரம்பிப்பதற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக காகித அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.<br><br>மதியுரை சேவைக் கம்பனியொன்றின் உதவியின் கீழ் தேவையான திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br><br>முன்மொழியப்பட்ட தொழிற்சாலைகளின் உற்பத்தியை ஆரம்பித்த பின்னர் ஆய்வுகூடத்தை பயன்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. | திட்டமொன்றின் பிரகாரம் கட்டிடத்தை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கூட்டுத்தாபனத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் போது ஒப்பந்தங்களை பூர்த்தி செய்வதற்காக அல்லது தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மதியுரையாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் வழங்கும் கடிதத்தில் ஆரம்பிக்கும் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யும் திகதி மற்றும் தாமதக் கட்டணங்களை அறவீடு செய்தல் என்பவற்றிற்கான குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் ஒப்பந்ததாரர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றல் சுட்டிகள் குறிப்பாகவும் போதுமானதாகவும் அளவிடக்கூடிய வகையிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 25 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் குறித்துரைக்கப்பட்டவாறு மதிப்பிடப்பட முடியாதிருந்தது. | மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு செயற்பாடு தொடர்பாகவும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலையின் பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டிக் கோவையின் 5.1.2 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 27 செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 18 மேலதிக செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் சதவீதமொன்றாக மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகையால் அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றுவதன் செயன்முன்னேற்றம் குறித்துரைக்கப்பட்டவாறு அளவிடப்பட முடியாதிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |